**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**<u>அசல் வழக்கு எண்.188/2018</u>**

நாள்: 14.06.2024

பெயர்: மருதமுத்து (வா.சா.2) த/பெ: கலியன்(எ) கலியபெருமாள்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை ...</u>**

1) தாவா சொத்தில் சர்வே எண்.397/3 ல் 5 ஏர்ஸ் மற்றும் சர்வே எண்.397/4 ல் 4 ஏர்ஸ் ஆகும். தாவா சொத்துக்கள் எங்களுக்கு பூர்வீக சொத்துக்கள் என்று என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் தந்தை பெயர் மொட்டையன் மகன் கலியன் (எ) கலியபெருமாள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தந்தை பெயர் முத்து மகன் கலியன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரில் (**பி.வா.சா.ஆ.1)** ல் சர்வே எண்.397/3 ல் மு.கலியன் என பெயர் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.397/4 ல் மொ.சீரங்கன், மொ.கலியன் என பெயர்கள் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கிரைய ஆவணம் (**பி.வா.சா.ஆ.2)** என் தந்தை எனக்கு எழுதி கொடுத்த ஆவணம் ஆகும். அதில் சொத்து விவரத்தில் பு.ச எண்.397/3 ல் 0.05.0 ஏர்ஸ் என உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 உடன் இணைக்கப்பட்டுள்ள கணினி சிட்டாவில் சர்வே எண்.397/3 ல் பட்டாதாரரின் பெயர் மு.கலியபெருமாள் என்று உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சர்வே எண்.397/3 எங்களுக்கு பூர்வீக சொத்து இல்லை என்றாலும் பிரதிவாதிகளின் தந்தை முத்து மகன் கலியன் (எ) கலியபெருமாளுக்கு சொந்தம் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தந்தை பெயரும், என் தந்தை பெயரும் கலியபெருமாள் என்று இருந்ததால் ஆள்மாறாட்டம் செய்து பிரதிவாதிகளுக்கு சொந்தமான நிலத்தை என் தந்தை தான்தான் மு.கலியபெருமாள் என்று ஆள்மாறாட்டம் செய்து எனக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தார் என்றால் சரியல்ல. என் தந்தை எனக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் செல்லதக்கதல்ல என்றாலும், அதனடிப்படையில் நான் ஜெயபாலுக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம்

செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல.

2) தாவா சொத்து சர்வே எண்.397/3 எனக்கு கிரையத்தின் அடிப்படையில்தான் கிடைத்தது. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் தாவா சொத்துக்கள் என் தந்தை இறந்த பின்னர் வாரிசு அடிப்படையில் என் பெயரில் தாவா சொத்துக்கள் முழுவதும் 1758 ம் எண் பட்டா மாறியிருந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் என் சாட்சியம் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. சர்வே எண்.397/4 மட்டும் தான் எங்களுக்கு சொந்தமானது என்றாலும், நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகள், கூரை சாலை, கிஸ்து ரசீது அனைத்தும் சர்வே எண்.397/3 க்கு உண்டானது அல்ல. சர்வே எண்.397/4 க்கு உண்டானது என்றால் சரியல்ல. சர்வே எண்.397/3 நாங்கள் எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றாலும், என் தந்தை எனக்கு ஏற்படுத்தி கொடுத்த கிரைய ஆவணத்தை வைத்துகொண்டு கடந்த 20.06.2018 தேதியில்தான் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததால் பிரதிவாதிகள் என் மீதும், வாதியின் மீதும் உடையார்பாளையம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது.

3) நான் காவல் நிலையத்தில் விசாரணைக்கு ஆஜரானேன் என்றாலும், என் செல்வாக்கை பயன்படுத்தி எங்கள் மீது வழக்கு போடாமல் செய்து கொண்டோம் என்றாலும் சரியல்ல. உடனடியாக வாதி இவ்வழக்கை தாக்கல் செய்து விட்டார் என்றால் சரியல்ல. வாதி என்னுடைய சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/– திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.